மூலிகை மணி

வேலூர் மருத்துவர் :- ஆ. இரா. கண்ணப்பர்

மலர் 10] ஆனந்த ௵ — ஆடி ௴ [இதழ் 9

[174-வது மூலிகை]



[விலை 50-கா

உ

முருகா.

'மூலிகை மணி'

(சித்த மருத்துவ மாத இதழ்)

ஆசிரியரும் அச்சிட்டு வெளியிடுபவரும்,

வேலூர் மருத்துவர் ஆ. இரா. கண்ணப்பர், D.M.P.

ஆண்டு சந்தா ரூ. 6—00 தனி இதழ் : 50-காசு

ஆடி இதழில்

தொலைபேசி எண் : 726. த. பெ. எண் : 126

69, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1 (வ. ஆ.)

உ
முருகா.



என்றுனைக் காண்பதோ!

கையினில் பற்பல மாலைகள் கொண்டுமே
அப்பனின் மகனது துதிபாடி
சென்றிடும் சிறியவர் நித்தமும் துதிசெய
அற்புதம் மனநிறை வுடனே தான்
பக்கமும் சக்தியை இருத்திடும் சிவமைந்தன்
சித்தங்கள் எனக்கருள் பெரியோனே
வேம்பத னருகிலே நித்தமும் தொழுவேனே
மட்டற்ற மகிழ்வுடன் அருள்வாயே
நித்தமும் உன்புகழ் பாடிட மனதினில்
வேலவன் அண்ணனே துதிப்பேனே
பக்தர்கள் மனதினில் பாவங்கள் போக்கிட
பவளவாய் திறந்தருள் சொல்லாயோ
அவ்வையும் உனதருள் வேண்டியே பெற்றிட
அன்புடன் கைலையில் விடுத்தாயே
அப்பனே உன்புகழ் எங்கனும் ஒலிக்குதே
என்றுனைக் காண்பதோ குறைதீராய்!

[மெட்டு : திருப்புகழ் கைத்தல நிறைகனி]

[N. அலமேலு, பொள்ளாச்சி]

கார்ட்டூன்



ஐந்துகரத்தனை யானைமுகத்தனை இந்தினிளம்பிறை போலுமெயிற்றினை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தனை புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

மூலிகை மணி

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே. — (தாயுமானவர்)

மலர் 10] ஆனந்த ௵ — ஆடி ௴ ஜூலை-74 [இதழ் 9

அமைச்சர் அன்பழகரின் சிந்தனைக்கு

தேவை: பரிவும் விரிவும்

தஞ்சை மன்னர் சரபோஜிக்குப் பின் சித்த மருத்துவத்தின்பால் பரிவும், பற்றும், பாசமும் கொண்டு, ஊக்கம்தரும் ஆக்கங்கள் பலவற்றை அமைச்சர் அன்பழகர் செய்து வருகின்றார் என்பதை, நன்றியுணர்வுள்ளவர்கள் மறுக்கமாட்டார்கள். ஆயினும், அவரின் பணிகள் காலத்தை வென்று வாழும் வகையில் அமையவேண்டும் என்பதே மூலிகை மணியின் அவா.

(1) ஆண்டுக்கு இருபது சித்த மருத்துவ மனைகள் திறப்பது

(2) படிப்படியாக தாலூகா மட்டத்தில் சித்த மருத்துவ மனைகளைத் திறப்பது

(3) இலட்ச ரூபாய் வருமானமுள்ள கோவில்களில் இலவச சித்த மருத்துவ மனைகளைத் திறப்பது, போன்ற சிறிய திட்டங்களைச் சீரிய முறையில் அவர் நிறைவேற்றி வந்தாலும்,

இவற்றினால் சித்த மருத்துவத்திற்கு வளர்ச்சி நூற்றுக்கு ஐந்து சதவிகிதம் தான் ஏற்படும். இவைகள் ஆங்காங்குள்ள பஞ்சாயத்து யூனியன்களும், கோவில் அதிகாரிகளின் அதிகார, திட்ட முதலீடுகளுக்குட்பட்டது. ஆனால் அமைச்சர் அன்பழகரைப் போன்றுள்ளவர்கள் செய்யக்கூடியது, இதனைக் காட்டிலும் பன்மடங்கு இருத்தல் வேண்டும்.

இருநூறு ரூபாய் வருமானமுள்ள ஒருவனிடம் உதவி கேட்டால், அவன் ஐந்து ரூபாய் கொடுத்தால் அது பொருந்தும். ஆனால் டாட்டா, பிர்லாவிடம் சென்று உதவி கேட்டால், அவர்களும் ஐந்து ரூபாய் கொடுத்தால், அதனை எப்படி பாராட்ட முடியும் !

அதுபோல் தான் உள்ளது அமைச்சர் அன்பழகர் சித்த மருத்துவத்திற்குச் செய்யும் சில பணிகளை, நாம் வரவேற்றாலும், மனம் திறந்து பாராட்டும் அளவுக்கு அவர் இன்னும் செய்யவேண்டியது அனேகம் உள்ளது.

தற்போது இருக்கும் இயக்குனர், திரு. வேணுகோபால் அவர்கள் நிர்வாகத் திறனிலும், சித்த மருத்துவ அறிவிலும், திட்டப் பணிகள் அமைப்பதிலும், முழுமையான ஆழ்ந்த அனுபவம் பெற்றவர். எனினும் அவருக்குப் போதிய நிதிவசதிகள் இல்லாமையால், வேகமான வளர்ச்சிப் பணிகளை அமைக்க இயலவில்லை.

சித்த மருத்துவம் மீது பரிவுடைய அமைச்சரும், சித்த மருத்துவ ஆராய்ச்சி அறவுடைய இயக்குனரும் இணைந்து செயலாற்றும் நேரம் இப்போது கிடைத்துள்ளது. அவர்களிருவரும் ஆற்றவேண்டியபணிகள் நங்கூரம் போல், சித்த மருத்துவக் கப்பலுக்கு அமைய வேண்டி, சில சீரிய திட்டங்களையும், அதற்கான நிதி வசதிகளையும் 'மூலிகை மணி' எடுத்துரைக்க விரும்புகிறது.

(1) விரிவாக அமைந்து வரும் சித்த மருத்துவ மனைகளுக்குரிய மருந்துகள் போதுமான அளவு கிடைப்பதில்லை. அந்த மருந்துகளை, அரசு தயாரிக்கும் வகையில் ஒரு திட்டத்தினை இயக்குனர் வகுத்து அதனைத் தமிழக அரசு மூலம் மத்திய அரசுக்கு அனுப்பி உதவிநிதி பெற போராடல் வேண்டும்.

(2) சென்னைப் பல்கலைக்கழகத்தில், 'தமிழ் மருத்துவம்' பற்றிய ஆராய்ச்சிகளுக்குப் போதிய ஆதரவும், உதவித் தொகை அளிப்பதன் மூலம் 'சித்த மருத்துவ ஆராய்ச்சி' மற்ற பல்கலைக்கழகங்களுக்கும் பரவி அறிஞர்கள் கவனத்தையும், வெளிநாட்டினர் கருத்தையும் கவரும்.

(3) தஞ்சை சரசுவதி மகாலில், ஏராளமான ஓலைச்சுவடிகள் கண்ணாடி அலமாரிகளில் காட்சிப் பொருளாக இருக்கின்றன. உடனடியாக ஓலையிலிருப்பதை அச்சில் பதிப்பிக்க, ஒரு நிபுணர்குழு அமைத்து வேகமாக பதிப்பிக்க முயற்சி செய்தல் வேண்டும். இதற்கான நிதி வசதிகளை மத்திய அரசடமிருந்து பெறுவது தான் சிறப்பு.

(4) மாவட்டத் தலைநகர்களில், தனியாக குறைந்த பட்சம் 100 படுக்கைகள் கொண்ட 'மாவட்டத் தலைமை சித்த மருத்துவ மனைகளை' அமைத்திடும் திட்டம் ஒன்றை விரிவாக அமைத்து செயல்படுத்த வேண்டும். இதற்காகச் சிறப்பு லாட்டரி சீட்டு வெளியிடலாம்.

மேற்கண்ட விரிவான திட்டங்களை, சித்த மருத்துவம்பால் பற்று கொண்டுள்ள அமைச்சரும், இயக்குனரும் இணைந்து செயல்படுத்த வேண்டும் என்று மூலிகை மணி எடுத்துரைக்கின்றது. ○○

உ

முருகா.



— முன் மாதத் தொடர்ச்சி

கண் வலிக்கு

பசுங் கன்றுகுட்டியின் சிறுநீரை கண்களில் காலை மாலை இரண்டு துளி வீதம் ஊற்றிவர 3 நாளில் குணமாகும். ஆனால் இளங் கன்றாக இருக்க வேண்டும்.

கண் குத்தலுக்கு

கோழி முட்டையை வேகவைத்து எடுத்து உரித்தவுடனே நீளவாட்டத்தில் அறுத்து மஞ்சள் கருவை நீக்கி, வெள்ளை கருவை மட்டும் சுடச்சுட கண்களில் வைத்து துணியால் கட்டி, ஆறிய பின் அவிழ்த்து எடுத்து விடவும். இவ்விதம் நான்கு முறை செய்ய குணமாகும்.

கண் சிவப்புக்கு

கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் வகைக்கு 1 காயும், ஒரு கைபிடி புளிய இலையும் போட்டு, ஒருபடி தண்ணீர் விட்டுக் காய்ச்சி அரை படியாக வற்றவைத்த கஷாயத்தை வெள்ளை துணியில் நனைத்து காலை மாலை கண்களைக் கழுவுவதனாலும், ஒற்றடம் இடுவதனாலும் கண் சிவப்பு மாறும். 3-நாள் தொடர்ந்து செய்க.

கண் மங்கலுக்கு

ஒரு படி நல்லெண்ணெயில் எட்டு பலம் சாதாரண மிளகை இடித்துத் தூளாக்கி அரைத்துப் போட்டு கலந்து, மூன்று நாள் வெய்யிலில் வைத்து எடுத்துக்கொண்டு, புதன் சனிக்கிழமைகளில் தலைக்குத் தேய்த்துக் குளிப்பதோடு, தினந்தோறும் சிறிதளவு தலையில் தேய்த்துக் கொள்வதனாலும் குணமாகும். ஆனால் இது கண்களில் படக்கூடாது.

கண்களில் பூ விழுந்தவர்களுக்கு

பனங் குருத்தை நறுக்கி இடித்து, கண்களில் பிழிந்துவர பூ விழுந்தது மாறிவிடும்.

கண் பூவிற்கு

நந்தியாவட்டப்பூ, முருங்கைப்பூ, நெருஞ்சிப்பூ உலர்த்தியது, சீரகம் ஆக இந்நான்கையும் சமஎடை எடுத்து இடித்து தூள்செய்து மெல்லிய துணியில் சலித்து வைத்துக்கொண்டு, தாய்ப்பாலில் குழைத்துக் கண்ணில் பூசிவர பூ மறையும்.

மாலைக் கண்ணிற்கு

கோழி அவரை இலையை அரைத்து, எலிமிச்சங்காய் அளவு 200 மில்லி பசும்பாலில் கலந்து, தினமும் காலை வேளையில் மட்டும் ஏழு நாட்கள் குடிக்கவும்.

கண் புழுவெட்டிற்கு

துருசை துணியில் சுற்றி கொளுத்தி, ஆறியபின் எடுக்க பற்பமாகும். அத்துடன் கத்தரிச் சாறு விட்டு அரைத்து, கயிறு போல் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு, தாய்ப்பாலில் உரைத்து கண் புழுவெட்டிற்கு காலை, மாலை ஐந்து நாட்கள் போட தீரும்.

(தொடரும்)



பாலைக் கொடி

[174-வது மூலிகை]

கோடி இனங்களில் பாலைக் கொடி மிக நீண்டு, உயர்ந்த மரங்கள்மீது படர்ந்து வளரும். படத்தில் காட்டியபடி இலைகள் பச்சை நிறமாக வெற்றிலை அளவு விட்டு, கொடி நிறைய இலைகள் படர்ந்து வரும் இந்தக் கொடி மிகவும் அழகான கொடி. ஒரு பெரிய மரத்தைப் பற்றி சுற்றி வளைத்துக் கொண்டால் அந்த மரத்தின் இலைகளையே இந்தக் கொடி மறைத்துவிடும்.

பாலைக்கொடியில் பலவிதமுண்டு. ஊசிப் பாலை, ஏழிலைப்பாலை, கடற்பாலை போன்றவை.

ஊசிப் பாலை

ஊசிப் பாலை என்பது நஞ்சுமுறிச்சான் கொடி ஆகும். ஏற்கனவே இது பற்றி தனிக் கட்டுரை ‘நஞ்சு முறிச்சான்’ என்ற தலைப்பிலேயே வெளியாகி உள்ளது. அது பற்றிய குறிப்புகளை அக் கட்டுரையில் காணலாம்.

ஏழிலைப் பாலை

இதன் குணாதிசயம் புழுக்கொல்லி, துவர்ப்பி, உரமாக்கி, முறை வெப்பமகற்றி ஆக வேலை செய்கிறது. குறிப்பாக ஏழிலைப் பாலையின் பட்டை, வேர் ஆகியவைகளைக் கொண்டு குடிநீர் (கஷாயம்) வைத்து குடித்துவர சூலை, கிருமி, ரணம், குன்மம், குட்டம், தாகம், அண்ட விக்கம், அதிசய தளம், சீதபேதி ஆகியவைகள் நீங்கும்.

கடற்பாலை

இதன் இலைகள் வெற்றிலை போல அகலமாக நீண்டு வளரும். இலைக்கு அதிசய குணம் உண்டு. இலையின் குணாதிசயம் என்ன வெனில், இலையின் கீழ்புறம் தடிப்புண்டாக்கும்; கொப்புளமெழுப்பும். இலையின் மேல்புறம் குளிர்ச்சியுண்டாக்கும். இதன் வேர் உடலைத் தேற்றி உரமாக்கும் சக்திகொண்டது. பாலைக்கொடியிலேயே கடற்பாலை மிக அற்புதமானதும் அதிசயமானதுமாகும். பெரும்பாலான கிராம மக்கள் இதனைப் பரம்பரை பரம்பரையாக கை மருந்தாகப் பயன்படுத்திக் குணம் கண்டு வந்துள்ளனர்.

இலையின் பயன்

இலையை அடிப்புறமாக வைத்து கட்டிகள் மீது கட்டினால், கட்டி பழுத்து உடையும். அதே இலையை மேல்புறமாக வைத்து கட்டினால் கட்டிகள் கரைந்து இருக்கும் இடம் தெரியாமல் போகும். எந்த மருத்து வராலும் செய்தற்கரிய இந்த வேலையை, நாம் கேவலம் என்று நினைக்கும் மூலிகை இனங்கள் அற்புத நிவாரணியாக விளங்குகின்றன.

வேர்

கடற்பாலையின் வேரை சுக்கு, மிளகு, சீரகம் சம அளவு போட்டு ஒரு மண்சட்டியில் இரண்டு குவளை நீர்விட்டுக் காய்ச்சி ஒரு குவளையாக சுண்டவைத்த குடிநீரை காலை, மாலை இருவேளையாகக் குடித்துவர, வாத வலிகள் எல்லாம் உடம்பை விட்டு நீங்கும்.

மூலிகை காயகல்பம்

கடற்பாலை கொடியின் வேரைத் தேவையான அளவு எடுத்து உலர்த்திச் சதாவரி கிழங்குச்சாற்றில் ஏழு நாள் ஊறவைக்க வேண்டும். (தினமும் புதியதான சாற்றில் ஊறவைக்க வேண்டும்) இப்படி ஊற வைத்து எடுத்து உலர்த்தி இடித்தத் தூளை பத்திரப்படுத்திக்கொண்டு, தினமும் கால் தோலா விதம் பசுவெண்ணெயில் காலை, மாலை தவறாமல் உண்டுவர வேண்டும். இப்படி 40-நாள் சாப்பிட்டவர்களுக்கு தேகம் பலத்தைக் கொடுத்து, புத்தியை விசாலமாக்கும். இதையே நெடுநாள் சாப்பிட்டுவர நரை, திரை, மூப்பு இன்றி நீண்டநாள் வாழலாம் என்று பெரியோர் கூறுவர்.

"ஐய மகற்று மரோசகத்தை மாற்றிவிடும்
பையுதிர வாயுவையும் பற்றறுக்கும் — மெய்யை
அமிழ்த்துகின்ற நீரை யனிலத்தைப் போக்குஞ்
சமுத்திரநற் சோழிவிதை தான்." (கு. மு.)

மருத்துவத் துணுக்குகள்!

மஞ்சட் காமாலைக்கு :

நோய்களில் மிகக் கொடியவற்றுள் மஞ்சட் காமாலை ஒன்று. இந்த நோயை முற்றவிடுவதன் மூலம் உயிருக்கே ஆபத்து நேரிடக்கூடும். இந் நோய்க்கு, சங்கம் வேர்ப்பட்டை 1 வராகன் எடை, அதிமதுரம் அரை வராகன் எடை, வெங்காயம் அரை பலம், சீரகம் அரைக்கால் பலம் இந் நான்கையும் அரைத்து பசுந்தயிரில் கலக்கி உண்ணவும். மூன்று நாள் காலையில் மட்டும் உண்ண மஞ்சட் காமாலை நோய் நீங்கும். இச்சா பத்தியம் இருக்கவும்.

மேக நோய்க்கு :

அவரை இலையை அரைத்து ஒரு கொட்டைப் பாக்கு அளவு காலையும், மாலையும் மூன்று நாட்கள் சாப்பிட மேக வியாதிகள் பலவும் தீரும். மூன்று நாட்களும் உப்பில்லாப் பத்தியம் இருக்க வேண்டும்.

வயிற்றுக் கடுப்புக்கு :

சப்பாத்திக்கள்ளி பழச்சாறும், சீனியும் கலந்து மூன்று நாள் மாலை நேரத்தில் சாப்பிட வயிற்று உழைச்சல் தீரும். மூன்று நாட்களும் கண்டிப்பாய் மிளகாய் காரம் கூடாது.

மயக்கத்திற்கு :

சீந்தில் தண்டுச் சாற்றைப் பசும்பாலில் கலந்து உட்கொண்டால் அடிக்கடி வருகிற தலை மயக்கம், கிறுகிறுப்பு முதலியவைகள் உடனே நீங்கும்.

கணைச் சூட்டுக்கு :

காய்ச்சிய பசுவின் பாலில் வில்வப்பழச் சதையைக் கலந்து, சக்கையை நீக்கி உட்கொண்டால் கணைச்சூடும், கடுமையான வெக்கை நோயும் நீங்கும். தொடர்ச்சியாக 20 நாள் அருந்தலாம். எவ்வித பத்தியமும் இல்லை.

[கி. ஆ. பெ. விசுவநாதம், திருச்சி]

உ

முருகா.

நோயும் - மருந்தும்

[இப் பகுதியில் வாழ்க்கைக்குப் பயன் தரும் எந்தவித கேள்விகளும் இடம்பெறும். கேள்வி கேட்பவர்களின் பெயர் அவசியமிருந்தாலன்றி வெளியிடப்பட மாட்டாது. எல்லோருக்கும் பயன்படும் கேள்விகள் எதுவாயினும் சரி, அவைகட்கு முதலிடம் தரப்படும். இப் பகுதியில் ஐந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து வந்த கேள்வி — பதில்களை மருத்துவ சம்பந்தப்பட்ட வரையில் தனியாக "நோயும்-மருந்தும்" எனத் தனி நூலாக வெளியிடப்பட்டுள்ளது. தேவையுள்ள அன்பர்கள் முன்பணம் மணியாடர் அனுப்பி பெறலாம். சினிமா சம்பந்தப்பட்ட கேள்விகள் கவனிக்கப் பட மாட்டாது. கூடிய வரையில் மருத்துவம், சமூகம் சமயம் பற்றிய கேள்விகளுக்குத் தான் முதலிடம்]

* * * * *

கே: குழந்தைகளுக்கு "வசம்பு" அதிகமாகப் பயன்படுத்தினால் 'திக்கு வாய்' வந்துவிடும் என்கிறார்களே! இது உண்மை தானா? அப்படியானால் அளவோடு பயன்படுத்துவதைப் பற்றி சிறிது விளக்கம் கூறவும்?

ப: வசம்புக்கு 'பிள்ளை வளர்த்தி' என்ற பெயரும் உண்டு. நமது 'மூலிகை மணி' கடந்த பரிதாபி ஆடி மீ இதழில் 150-வது மூலிகையாக இடம் பெற்று, நீண்ட விரிவானதொரு விளக்கமுடன் எழுதியுள்ளோம். இதனால் 'திக்கு வாய்' வருவது என்பது உண்மை அல்ல!

கே: நான் 19-வயதுள்ள மாணவன். எனக்கு அறிவு தெரிந்ததிலிருந்து இடப்புறம் மட்டும் விதை உள்ளது. வலதுபுறம் விதை காணப்படவில்லை. இரண்டு ஆண்டுகளாக இந்த ஒரு விதையில் வீக்கம் கண்டு, அழுத்தினால் சிறியதாகி, சிறிது வலியும் உண்டாகிறது. மேலும் அடி வயிற்றிற்கு சற்று கீழே இடப்புறம் சிலசமயம் வலி உண்டாகிறது. வலப்புறம் வலி இல்லை. ஆங்கில

மருத்துவர் அறுவை சிகிச்சை செய்துகொள்ளும்படி கூறுகிறார். நான் எதுவும் செய்யாமல், மனவேதனைப்படுகிறேன். தங்களின் மேன்மையான ஆலோசனையைக் கேட்டு, அதன்படி செய்ய விரும்புகிறேன். விளக்கம் தரவும்?

ப: தம்பீ! வயது 19 ஆகிவிட்டது. இயற்கையில் ஒருவிதை மட்டும் இருப்பதால் எந்தவித கெடுதலுமில்லை. இதற்காக அறுவை சிகிச்சை அவசியமில்லை. மன வேதனையும் படவேண்டாம். அடி வயிற்றில் வலி உள்ளபோது உத்தாமணி இலையை வதக்கி ஒத்தடம் கொடுத்து வரவும். முதலில் மனக்கவலையை மறக்க முயற்சி செய். பூரண குணம் காணலாம்.

கே: எனது 2-வது குழந்தை — 8 மாத பெண் குழந்தை. 20 நாட்களாக தாய்ப்பால் குடிப்பதில்லை. பசும்பால் புட்டியில் கொடுத்தால் ஏற்றுக்கொள்ளாமல் உமிழ்ந்து விடுகிறது. இதற்கு மந்திரத்தாலும் பயன்காண முடியவில்லை. தங்களின் மருத்துவ ஆலோசனையை வேண்டுகின்றேன்.

ப: தினமும் காலையில் 'கற்பக மிளகுப் பொடி' யை தேனில் குழைத்து (1 சிட்டிகை) கொடுத்து வரவும். ஒரு வாரத்தில் நன்கு பசி எடுத்து ஆகாரம் எடுக்கும்.

கே: என் உடலில் அம்மை தழும்பு உள்ளது. இதை போக்க வழி கூறவும்?

ப: வழியே இல்லை! அது பராசக்தியின் சின்னம். இதனால் வெட்கமோ, அருவருப்போ வேண்டாம்.

கே: என் வயது 16. சில வருடங்களாக ஒரு குறிப்பிட்ட காலத்தில், வண்டுகடி போல் முகத்தில் தோன்றுகிறது. முகம் கருமையாக மாறிவிடுகிறது. சிலர் ஆலோசனைப்படி பெரியாநங்கை இலைச்சாற்றை தடவிவந்தேன்; பயனில்லை. முகம், கழுத்து வரை பரவி வந்திருக்கிறது. இதற்கு தக்க மருத்துவம் கூறவும்?

ப: நான்கு முறை 3 மாதத்திற்கு ஒருதடவை எமது "மகா மூலிகை எண்ணெ" யை பத்தியமுடன் இருந்து சாப்பிட்டுவர உமது குறை யாவும் நீங்கும்.

கே : என் வயது 18. எனக்குத் தலைபாரம், கை கால் வலி, தலைசுற்றல், தூக்கமின்மை இருக்கிறது. இடதுபுறம் விதை வீக்கம் கண்டிருக்கிறது. ராகி, அரிசி உணவில் சேர்த்து சாப்பிடுகிறேன். இரவில் ஸ்கலிதமும் ஏற்படுகிறது. கெட்ட பழக்கங்கள் எதுவும் கிடையாது. எனக்கு ஒரு வைத்தியம் கூறி காப்பாற்றுங்கள்.

ப : காப்பாற்றுவது ஆண்டவன் கையில். ஆனால் மருத்துவம் மட்டும் கூறலாம். சிறுவயதிலேயே பித்த - வாய்வு - இதனால் விளைந்த விளைவுகள் தாம். காலையில் இஞ்சி சாறு தேன் சம அளவு கலந்து குடித்து வரவும். உணவில் சுக்கு, பெருங்காயம், பூண்டு ஆகியன நிறைய சேர்த்துவர படிப்படியாக குணம் காணும்.

கே : சமையல் செய்யும் பொருட்டு, ஸ்டவ் அடுப்பு எரிப்ப தினால் உண்டாகும் புகையும், மற்றும் விறகு அடுப்பு எரிப்பதினால் உண்டாகும் புகையும் ஏதாவது தீமையை உண்டாக்குமா? எது உடம்புக்கு நலம் என்பதை தெரிவிக்கவும்?

ப : கெரசின் ஸ்டவ் அடுப்பால் அந்த வீடே ஒரு மாதிரி வீச்சம் புகைக்கு ஆளாகிறது. இதனால் வரும் தீமை அளவிட முடியாது. ஆனால் விறகு அடுப்பு புகையால் உடலுக்கு ஒரு கெடுதலும் உண்டாகா.

கே : நான் 22 வயதுள்ள ஒரு தொழிலாளி. என் வேலை முடிந்து, இரவில் சாப்பிட்டு படுக்கைக்கு சுமார் 1-மணிக்குத் தான் போகிறேன். 2 வருடமாக தலைமுடி உதிர்வது அதிகமாகிவிட்டது. தங்கள் வைத்தியத்தில் பலன் கிடைக்கும் என்று அறிந்து தங்களை நாடியிருக்கிறேன். நிற்க, மீசை மயிர் கருமையாகவும், வளர்ச்சி யுள்ளதாகவும் இல்லை. இந்தக் குறைகளை போக்க ஒருவழி கூறவும்?

ப : சிக்கலான கேள்விகள். மீசை மயிர் கருமை இல்லை! வளர்ச்சி இல்லை — வயது 22. தாடி வளர்கிறதா? கண் புருவம் ரோமம் இருக்கிறதா? என்ற கேள்விகளுக்கெல்லாம் விடை தெரிந்தாக வேண்டும். இல்லையானால் இதற்குத் தக்க சிகிச்சை சொல்வது கடினம்.

கே : என் வயது 41. திருமணமான பெண். எனக்கு இடது தோள்பட்டையில் அடிக்கடி வலி ஏற்பட்டு மறைகிறது. 1-நாள் பூராவும் இப்படி இருந்து பிறகு சரியாகிவிடும். இம்மாதிரி 4, 5 வருடங்களாக இருக்கிறது. இப்பொழுது தோள்பட்டையில்

இருந்து இடது மார்பில் கீழ் இறங்கி வலி ஏற்படுகிறது. இதனால் உடல் அசதி உண்டாகி இருக்கிறது. காரணமும், இதைப் போக்க சிகிச்சையும் கூறவும்?

ப: வாய்வு சம்பந்தமான நாள்பட்ட வலி இது. இடம் விட்டு இடம் பெயருகிறது. ஓடு வாய்வு என்றும் சொல்லலாம். இதற்கு சிகிச்சை ஆற்றுமணலை எடுத்து நன்கு வறுத்து சூடாக வெள்ளெருக்கன் இலையில் வைத்து மூட்டை கட்டி வலியுள்ள இடங்களில் ஒத்தடம் கொடுத்துவர வலி நீங்கும். பூரணமாக குணம் கிடைக்க நேரில் ஒரு நாட்டு மருத்துவ நிபுணரை நாடவும்.

கே: இஞ்சியை தினமும் சாப்பாட்டில் சேர்த்துக்கொள்ள லாமா? அதன் பயன் யாது? நீர் அடைப்பு (அல்லது) நீர்சுருக்கு உண்டாகும் என்று சிலர் கூறுகிறார்கள். இது உண்மையா?

ப: இஞ்சிக்கு எரிப்பு கொண்டாட்டம். எனவே தினமும் இஞ்சியைக் காலையில் பயன்படுத்த எந்தவித கோளாறும் உண்டாகாது. சூடு உண்டானால் சிறிதளவு பால், மோர் குடித்துவிடலாமே!

கே: நான் 55 வயதுள்ள ஆண். சுமார் 3 மாதங்களாக இடக்கை விரல்களை சேர்த்து தண்ணீர் நிரம்பிய பாத்திரங்களைத் தூக்கும்போது கை நடுக்கம் உண்டாகிறது. கடினமான வேலையும் செய்யமுடியவில்லை. என் தாயாருக்கு வயதான பிறகு இடக்கை பூராவும் செயலற்றிருந்தது. இந்நிலை எனக்கும் ஏற்படுமோ என்று கவலைப்படுகிறேன். இதை விலக்க ஒரு சிகிச்சை முறையும், பத்திய விவரமும் விளக்கி கூறவும்?

ப: தாய்க்கு வந்த நோய் சேய்க்கும் வரலாம். எனவே தடுப்பு முறையாக குளிர்ச்சி தரும் உணவுகளை நீக்கவும். கோதுமை ஆகாரம் நல்லது. அடிக்கடி சித்த மருத்துவரிடம் சென்று ஆலோசனை, செந்தூரம், மருந்துகள் வாங்கி தேனில் உண்டுவர தடுத்துவிடலாம்.

கே: என் மனைவிக்கு வயது 50 ஆகிறது. காது வலியால் கஷ்டப்படுகிறாள். "கும்" என்று அடைத்துவிடுகிறது. சத்தம் போட்டு சொன்னால் கேட்கிறது. காது வலி, காதடைப்பும் நீங்க ஒரு மருத்துவம் கூறவும்?

ப: தூதுவளை இலையை தினமும் பாலில் வேகவைத்து, அந்த பாலைக் குடித்துவர 20 நாளில் அடைப்பு நீங்கிவிடும்.

கே : தங்கள் மாத இதழில் — 'நாயுருவி' வேரால் பல் துலக்கினுல் நலம் என்பதைப் பார்த்தேன். குச்சியினுலும் பல் தேய்க்கலாமென்று சிலர் கூறுகிருர்கள். அப்படி என்ருல், ஒவ்வொரு நாளும் ஒரு செடியை வீணுக்கவேண்டி இருக்கிறதே! எந்த முறை நல்லது?

ப : மூலிகைகள் நமக்காகவே வளர்கின்றன. மெழுகுவர்த்தியைப் போல், வேர் முதல் இலை வரை மருத்துவப் பயனுகின்றன. பயன் கருதும்போது வீணடிப்பதை நினைத்தால் எப்படி பலன்பெறுவது? எனவே, எதை நீங்கள் பயன்படுத்தினுலும் சரியே!

கே : (1) நீர்ஆரை கீரையை வெய்யிலில் உலர்த்தி பொடி செய்து உபயோகப்படுத்தினுல் பலன் உண்டா?

(2) 'ஆவாரைப் பஞ்சாங்க சூரணம்' நீரிழிவு நோய் இல்லாதவர்கள் உபயோகிக்கலாமா? பலன் என்ன?

ப : (1) பயன் தராது.

(2) யாவரும் பயன்படுத்தலாம். கெடுதலில்லை!

கே : 'தொட்டால் சுருங்கி' என்பதும், 'தொட்டால் சிணுங்கி' என்பதும் ஒரே மூலிகையின் பெயர்தானு? அதை தெரிந்துகொள்வது எப்படி?

ப : யாவும் ஒரே மூலிகைதான். எமது நம் நாட்டு மூலிகைகள் வரிசையில், 'தொட்டால் சிணுங்கி' என்ற மூலிகைக் கட்டுரையை வாசிக்க அதில் விரிவான விளக்கம் காணலாம்.

கே : என் வயது 35. கண் கோளாறு உள்ளவன். கண்களின் மேல்பகுதியில் அமுக்கினுற் போன்ற வலி ஏற்படுகிறது. சிறிது நேரம் கழித்து சரியாகிவிடுகிறது. தூரப்பார்வை மங்கலாகவும், வெண்ணிற புள்ளிகள் சிலசமயம் தோன்றி மறையும். அச்சமயம் புத்தகம் படிக்கமுடியாது. நீர் வடியும்; பின் சரியாகிவிடும். கண், மூக்கு, காது துவாரங்களில் ஏதோ தூசி, மணல் சேர்ந்திருப்பது போல் உறுத்தும். இதற்கு நானே தயார்செய்த 'நேத்திரப் பூண்டு தைலத்தை' உபயோகப்படுத்தினேன்; பயனளிக்கவில்லை. இதை போக்க மருத்துவ ஆலோசனை கூறவும்?

ப: நீங்கள் தயாரித்த தைலம் நேத்திரப்பூண்டாக இருப்பின், நிச்சயம் ஓரளவாவது குணம் ஆகியிருக்கும். எனவே, எமது தயாரிப்பு 'நேத்திரப் பூண்டு தைலம்' போட்டு பார்த்து பலன் எழுதவும்.

கே: கண்களில் மண்ணை தூவி எறிந்தால், கண் விழிக்க முடியாமல், துன்பப்படும் சிறு பையன்களுக்கு கண் சரியாவது எப்படி? மருத்துவ முறையில் என்ன செய்யலாம்?

ப: முதலில் சுத்தமான நீரில் அமுக்கி விழித்து பார்க்கச்சொல்லி 7 முறை இப்படி அலசவும். பிறகு தாய்ப்பாலும், விளக்கெண்ணெயும் கலந்து வைத்துக்கொண்டு கண்களில் விட்டு வரவும்.

கே: தொண்டையில் புண் உண்டாகி 3 மாதங்களாகிறது. வலியும் உள்ளது. ஆங்கில முறை மருத்துவம் பயனளிக்கவில்லை. குணம் காண வழி கூறவும்?

ப: மணித்தக்காளி இலையை தினமும் காலை வேளை மென்று தின்றுவர தொண்டை ரணம் ஆறும்.

கே: எனது 4 வயது குழந்தைக்கு அடிக்கடி சிலந்தி வந்து தொல்லை கொடுக்கிறது. வராமல் தடுக்க என்ன செய்யலாம்?

ப: வாரம் 1 முறை ஆமணக்கெண்ணெய் வயிற்றுக்கு ஊற்றவும். இதனால் உடல்சூடு கழிந்து சிலந்தி வருவது நிற்கும்.

கே: என் வயது 22. சிறு வயதிலிருந்தே என் குரல் பெண் குரல் போல் உள்ளது. இதற்கு ஏதாவது சிகிச்சையுண்டா? தெரிவிக்கவும்.

ப: இம் மாதிரி இயற்கையில் சிலருக்கு உண்டு. கீச்சுக்குரல் என்று இதனைக் கூறுவர். மருத்துவச் சிகிச்சையில் இதனை மாற்றுவது கடினமே. அதனால் அப்படியே விட்டு விடுவது நல்லது.

கே: 'உயிர் மூலிகை' என்றால் எந்த செடியை குறிக்கும்? ஒரு மருத்துவரிடம் தலைமுடியை போன்ற வஸ்துக்களை வைத்திருந்தார். அது தன்னைத் தானே சுற்றிக் கொள்கிறது. அதை உயிர் மூலிகை என்று சொன்னார். இதை போல் மூலிகை உள்ளதா? அதனை அறிய அவா; தெரிவிக்கவும்.

ப : வளரும் மூலிகைகளுக்கெல்லாம் உயிர் உண்டு. ஒரு சில மூலிகைகளுக்கு "தொட்டால் சிணுங்கி" போன்ற உணர்ச்சிகளும் உண்டு. எனவே உயிர் மூலிகை என்பது அனைத்து மூலிகைகளுக்கும் பொருந்தும்.

கே : என் தாயாருக்கு 2 வருட காலமாக, சாப்பிடுவது உடலில் தங்காமல், வயிற்றில் எரிச்சல் ஏற்பட்டு மலம் அதிகமாக கழிகிறது. இந்த எரிச்சலும், வயிற்றுப்போக்கும் நீங்க என்ன செய்யலாம் ?

ப : வயிற்றில் ரணம் உண்டாகி இருக்கிறது. பொடுதலைக்காயை துவையல் செய்து உணவில் சேர்க்கலாம். பிரண்டையை துவையல் செய்து உணவில் சேர்க்கலாம். இவைகள் எல்லாம் வயிற்றில் உள்ள ரணத்தை ஆற்றும் சக்தி கொண்டவை.

கே : என் வயது 32. திருமணமானவள். நாக்கில் புண் ஏற்பட்டு அதிக அவதிப்படுகிறேன். ஆங்கில முறையில் குணம் இல்லை. மூலிகை வைத்தியம் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ப : நாவில் ரணம் ஏற்படுவது மேகநோய் குறிகளாகும். இதற்கு தமிழ் மருத்துவரிடம் நேரில் காண்பித்து சிகிச்சை செய்துக்கொள்வது நல்லது. மற்றவை பலன் தராது.

கே : நான் ஒரு திருமணமாகாத பெண். என் வளர்ச்சியில் நல்ல உயரம் இல்லை. உயரமாக வளர்வதற்கு என்ன செய்ய வேண்டும் ? விளக்கம் கூறவும்.

ப : இரவில் படுக்கும் போது கால்களை நீட்டி படுக்க வேண்டும். காலையில் வளையம் ஆடவேண்டும். கீரை வகைகளை அடிக்கடி ஆகாரத்தில் சேர்க்க வேண்டும். இதனால் உயரமாக வழி காணலாம்.

கே : எனக்கு மனவருத்தம் ஏற்பட்டு முடி வளர்த்து, பிறகு மொட்டை அடித்துக் கொண்டேன். தினமும் தலைக்கு ஸ்னானம் செய்பவன். முடி வளரவிடாமல் மொட்டை அடித்துக் கொண்டே இருப்பதால், உடலுக்கு தீமை ஏற்படுமா ? முடியுடன் வாழ்வது தான் நல்லதா ?

ப : அடிக்கடி மொட்டையடிப்பதில் தவறில்லை. ஆரோக்கியம் தான் ! ஆனால் முடி வளர்ப்பது ஓரளவாவது இருந்தால் நல்லது.

பெண்களைப் போல தலைமுடி நிறைய வளர்த்துக்கொள்வதும் உடல் நலனுக்கு தீமை உண்டாக்கும்.

கே: என் வயது 41. காதல், காம உணர்ச்சி அதிகமாக உள்ளது. அதனை அடக்கி மனஅமைதி பெற நல்லவழி கூறவும்?

ப: காம இச்சையை அடக்க, இறைஉணர்வு மிக வேண்டும். பக்தியால் எதையும் சாதிக்கலாம். உணவில் சாந்தம் தரும் குளிர்ச்சியான காய்கறி வகைகளை சேர்க்கவேண்டும். கீரையினங்கள் நல்ல பயனுடையவைகள். நமது "பயன் தரும் பத்துக் கீரைகள்" என்ற நூலை வாங்கிப் படித்து பயன்படுத்துங்கள்.

கே: 42 வயதுள்ளவருக்கு — 20 வயதுள்ள பெண்ணை கலியாணம் செய்து வைத்தால், அந்த வாழ்வு எப்படி இருக்கும்? ஆரோக்கியமாக வாழ முடியுமா? திருமணம் செய்ய ஆண், பெண் வயது எப்படி இருப்பது நலம்?

ப: திருமண வயது 5 வயது ஆணுக்கு அதிகமாகவும், பெண்ணுக்கு குறைவாகவும் இருப்பதால், நல்வாழ்வு, நற்குழந்தைப் பேறு, சந்ததி விருத்தி உண்டாகும். 42 வயதுள்ள ஆண் — 20 வயதுள்ள பெண்ணை மணப்பது அதமத்திலும் அதமம்.

முக்கிய அறிவிப்பு!

வாசக அன்பர்கள் தங்கள் சந்தாவை புதுப்பிக்க பணம் அனுப்பும்போது M. O. கூப்பனில் பழைய சந்தா எண்ணையும் பெயர், விலாசம் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டியது அவசியம். மருந்துகள், வெளியீடுகள் பெற M. O. அனுப்புவோர்களும், தேவையானவற்றை M. O. கூப்பனிலேயே குறிப்பிட்டு எழுதிவிட்டால் தாமதமின்றிப் பெறலாம். தனிக் கடிதம் எழுத வேண்டிய அவசியமும் இல்லை!

மேலாளர்: மூலிகை மணி,
58, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1. (வ. ஆ.)

பொன்னாங்கண்ணி தைலம்

அசல் பொன்னாங்கண்ணிக் கீரையால் முறைபடி தயாரித்தது. கண் ஒளிக்கும், பார்வைக்கும் சிறந்தது. தலைக்கு ஸ்னானமாகவும், தினம் தடவிக்கொள்ளவும் ஏற்றது. ஒரு புட்டி விலை ரூ. 5—00

தலைவலிக்கு தைலம்

அடிக்கடி தலைவலி வரும் அன்பர்கள் வாரம் இருமுறை இதனை தேய்த்து ஸ்னானம் செய்துவர படிப்படியாகத் தலைவலி நீங்கும்.

ஒரு புட்டி விலை ரூ. 5—00

புழுவெட்டு நீங்கத் தைலம்

தலையில் வரும் புழுவெட்டு, பொடுகு, ஆகியன நீங்க இதனை தினம் தலைக்குத் தடவி வரலாம். ஒரு புட்டி விலை ரூ. 5—00

செம்பரத்தம் பூ தைலம்

இளம் வயதினர்கட்கு முடி செழித்து வளர தலைக்குத் தடவி வந்தால் இத் தைலம் துணைபுரியும். ஒரு புட்டி விலை ரூ. 5—00

அவுரித் தைலம்

இளநரை, தலைமுடி உதிர்தல் நீங்கி முடி செழித்து வளர தினமும் தலைக்குத் தடவி வரலாம். ஒரு புட்டி விலை ரூ. 10—00

பித்தத்திற்குச் சூரணம்

காபி, டீ, புகையிலை மற்றும் பித்தம் தொடர்பான பொருள்களை அதிகம் பயன்படுத்துவோர், இந்த சூரணப் பொடியைப் பயன்படுத்தி பித்தத்தை நீக்கலாம். ஒரு பாக்கெட் விலை ரூ. 3—50

ஆவாரைப் பஞ்சாங்க சூரணம்

நீரிழிவு நோயுடையவர்கட்கு, அந் நோயைக் கட்டுப்படுத்தவும் காபி, டீ போன்ற பானங்கட்கு பதிலாக இதனை காபிபோல் பயன்படுத்தி நீரிழிவைக் கட்டுப்படுத்தலாம். ஒரு பாக்கெட் விலை ரூ. 5—00


தேவையான மருந்தைக் குறிப்பிட்டு, இத்துடன் தபால் செலவு ரூ. 3—00 சேர்த்து கீழ்க்கண்ட முகவரிக்கு மணியாடர் செய்தால் உடன் பதிவு பார்சல் மூலம் வரிசைக்கிரமமாக அனுப்பி வைக்கப்படும். மருந்துகள் ஒன்றுக்கு மேல் 2 (அ) 3 புட்டிகளுக்கு ரூ. 4—00ம், 4(அ)5 புட்டிகளுக்கு ரூ. 5—00 பார்சல் செலவு சேர்த்து அனுப்பவும்.

மணியாடர் கூப்பனில் தெளிவான விலாசமும், தேவையான மருந்துகளும் விபரமாக எழுதாவிடில் உடன் கவனிக்க இயலாது.

முகவரி :— **ஆ. இரா. கண்ணப்பர், R. M. P.**

59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-632001 (N. A.)

உ



—முன் மாதத் தொடர்ச்சி

கொன்றை

கொன்றையில் அநேக இனம் உண்டு. சரக்கொன்றை, செங்கொன்றை, சிறுகொன்றை, கருங்கொன்றை, நரிக்கொன்றை, புலிநகக் கொன்றை, மைக்கொன்றை, மந்தாரக்கொன்றை, முட்கொன்றை போன்ற பலவகை உண்டு. பெயருக்கேற்ப இதன் உருவமாறுபாடுகள் இலை, பூ, காய் எல்லாம் அமைந்துள்ளது.

சரக்கொன்றை

வேறு பெயர்கள் :— மண்ணை, கொன்றை, பெருங்கொன்றை, க்ரதமாலம், தாமம், மதலை, இதழி, ஆக்குபதம், கடுக்கை. ஆங்கிலப் பெயர் : இண்டியன் லாடோர்நாம், புட்டிங் பைப் ட்ரீ, பர்ஜிங்கேசியா, தெலுங்கு : ரேலாகாயுலு, மலையாளம் : கோன்னு, கன்னடம் : காக்கி, இந்தி : அமல்டாஸ்.

உபயோக உறுப்புகள்

இலை, பூ, புளி, விதை, காய், ஓடு, மரப்பட்டை, வேர்ப்பட்டை

சுவை : துவர்ப்பு, கைப்பு, வீர்யம் : வெப்பம், பிரிவு : கார்ப்பு

குணாதிசயம்

மலம் விலக்கி, நுட்புழுக் கொல்லி, பூச்சிக் கொல்லி, புழு அகற்றி, நீர் மலம் போக்கி, வெப்பகற்றி, துவர்ப்பி, உரமாக்கி.

சிறு கொன்றை

வேறு பெயர்கள் :— சிறுக்கொன்றை, ஆங்கிலம் : காசியா அர்போசன்ஸ்.

உபயோக உறுப்புகள் — இலை, பட்டை

சுவை : கைப்பு, வீர்யம் : வெப்பம், பிரிவு : கார்ப்பு

குணாதிசயம்

வெப்பம் உண்டாக்கி, அழகுண்டாக்கி, மூலநோய் போக்கி, உரமாக்கி.

செங்கொன்றை

வேறு பெயர்கள் :— செங்கொன்றை, ஆங்கிலம் : கேசியா மார்ஜினேட்டா.

உபயோக உறுப்புகள் — பூ, கொட்டை

சுவை : கைப்பு, வீர்யம் : வெப்பம், பிரிவு : கார்ப்பு

குணாதிசயம்

கோழையகற்றி, புழுக்கொல்லி, உரமாக்கி, நுட்புழுக்கொல்லி

நரிக்கொன்றை

வேறு பெயர்கள் :— நரி கொன்றை, ஆங்கிலம் : கேசியா பாக்ஸோனியா.

உபயோக உறுப்பு — பட்டை

சுவை : கைப்பு, வீர்யம் : வெப்பம், பிரிவு : கார்ப்பு

குணாதிசயம்

நுட்புழுக் கொல்லி, பூச்சிக் கொல்லி, புழு அகற்றி, அகட்டு வாய்வகற்றி.

மைக்கொன்றை

வேறு பெயர்கள் :— மயில் கொன்றை, ஆங்கிலம் : கேசியா ஆல்பா.

உபயோக உறுப்புகள் — பூ, பட்டை

சுவை : துவர்ப்பு, வீர்யம் : அற்ப வெப்பம், பிரிவு : கார்ப்பு

குணாதிசயம்

வாதமடக்கி, சிறுநீர் பெருக்கி, மேகப்பிணி விலக்கி, மலம் இளக்கி.

(தொடரும்)

விக்கல்!

Dr. S. சுப்பிரமணியன், L. I. M
விரிவுரையாளர், பட்ட மேற்படிப்புத் துறை.

விக்கல் என்னும் குறி குணம் தனியான நோயாகாது. இது சில நோய்களில் காணப்படும் முக்கிய குணம். அநேகமாக படுத்த படுக்கையில் இருக்கும் நோயினருக்கு விக்கல் கண்டால் நோய் குணமாகும் சந்தேகத்தை உண்டுபண்ணக் கூடியது, இக்குணம் கண்டவுடன் காரணத்தைக் கணித்து, தகுந்த உள்மருந்து வெளிமருந்து உபயோகித்து தீர்க்கவேண்டியது பண்டிதனின் கடமையாகும்.

விக்கல் உண்டாகும் விதம்

விதானம் சுருங்கும் பொழுது குரல்வளை விரிவடைந்து காற்று உள்ளே போக ஏதுவாகிறது. விதானத்தின் இசிவு எப்பொழுதாவது உண்டாகும் பொழுதும், குரல்வளை மூடிக்கொள்வதில் ஏற்படும் இசிவாலும் ஏற்படுகிறது.

" சேத்துமத்தின் கோதமலாது விக்கல் எடாது " — (தேரையர்)

" அடைவான சேத்துமத்தில் சீதளம் பற்றில்
... ...
... ...
" சேர்ந்த விக்கல் சந்நி விடதோடம் வீச்சு "

— (சதகநாடி)

" தொந்தித்த சேத்துமத்தில் வாயு கூடி
... ...
... ...
... ... மயக்கம் விக்கல்

— (சதகநாடி)

மேற்கூறப்பட்ட மேற்கோள்களிலிருந்து முக்குற்றத்தில் ஐயம் (கபம்) கேடடைந்து சீத வீரியம் அடைந்த பொழுதும், வாயு கூடின பொழுதும் விக்கல் காணப்படும் என்று தெரியவருகிறது.

நவீன மருத்துவ அடிப்படையில் கீழ்கண்ட காரணங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

காரமான, அதிக சூடான உணவு கொண்டபொழுதும், வயிறு உப்பிசத்தாலும், வலப்பாட்டீரலில் நோய் கண்டபொழுதும், விதான நரம்பு தூண்டப்படுகிற காரணத்தாலும், சுரத்திலும், வயிற்றில் உள்ள உறுப்புகள் புண்பட்ட நிலையில், பரியாந்திர ஜவ்வு புண்படுவதாலும்,

மார்புக் கூட்டில் உள்ள உறுப்புகள் நோய்வாய்ப்பட்ட காலத்திலும் விதானத்தை ஒட்டியுள்ள பரிபுப்புசம் புண்பட்ட காலத்திலும், சிறுநீர் சரியாகக் கழியாமல் அதனுல் விக்கம் கண்டு செந்நீர் குற்றமடைந்த நிலையிலும் (Uraemia) Neurosis என்று சொல்லக்கூடிய மனநிலையிலும் விக்கல் உண்டாகலாம். மேலும் மூளை நோயிலும், கசேறு கொடிநோய் வாய்ப்பட்ட நிலையிலும் உண்டாகலாம்.

" நாளடா நாற்பத்து நாலு நூறு நயமுடனே நாற்பத்தெட்டு
ரோகம் ... ...
... ... பகர்காது நோய் பத்து விக்கல் பத்து "

(இரத்தினச் சுருக்க நாடிநூல் பிணிதொகுப்பு)

என்று கூறியிருப்பதால் விக்கல் பிணி 10 வகையாகக் கணிக்கப்பட்டு இருக்கிறது.

1. அன்ன விக்கல் — உணவு அருந்தும் பொழுது உண்டாகும் விக்கல்.
2. சூத்திர விக்கல் — செரியாமல் உண்டாகும் விக்கல்.
3. யமன் விக்கல் — செரிக்கும்பொழுது உண்டாகும் விக்கல்.
4. மகர விக்கல் — கொடுமையாக வரும் விக்கல்.
5. கம்பீர விக்கல் — மிகுந்த ஒலியுடன் வரும் விக்கல்.
6. உளி விக்கல் — காரமான பொருளை உட்கொண்டதால் அடிக்கடி வரும் விக்கல்.
7. அழல் விக்கல் — களைப்பு, சோர்வு முதலியவைகளால் வருவது. நெஞ்சுக் குழியிலிருந்து வரும் விக்கல்
8. ஐயம் விக்கல் — கண் தெரித்து விழுவதுபோல் உண்டாகும் விக்கல்.
9. * முக்குற்ற விக்கல் — சுரத்துடன் காணும் விக்கல்.
10. செரியா விக்கல் — வரண்ட பொருள், செரியா பொருள் முதலியவைகளை உட்கொள்வதில் வருவது.

விக்கல் கண்டவுடன் சாதாரணமாகப் பயப்பட வேண்டியதில்லை. ஆனுல் சில குறிகுணங்களுடன் விக்கல் கண்டால் தீராது என குறிப்பிட்டிருப்பதைக் கண்டு, தீரும்; தீராது என்று அறியவேண்டும். வயிற்று உறுப்புகள் நோய்வாய்ப்பட்டு இருக்கும் நிலையிலும், சிறுநீர் கழியாது செந்நீர் கெட்டு இருக்கும் நிலையிலும் விக்கல் கண்டால் தீருவது அரிது.

* இக்குறியிட்டவை தீருவது அரிது.

" தொகுத்திட்ட நீரிழிவு மேகசூலே
... ...
... ...
பகுத்திட்ட இளைப்புடனே சுவாசம் விக்கல்
பற்றினால் மரணமென்று பகுத்துச்சொல்லே "— (சதகநாடி)

என்ற மேற்கோளால் விக்கல் கண்ட தீராதநிலை கூறப்பட்டிருக்கிறது.

முக்குற்றத்தில், முக்கியமாக ஐயம் கேடு அடைந்திருப்பதை " நசியம் அஞ்சனத்தால் ஐயந்தாழும் " என்றபடி ஐயத்தை தன் நிலைக்கு கொண்டுவர வேண்டும். மேலும் வாயு கூடி நின்றால் அகட்டு வாய்வு அகற்றி செய்கையுள்ள மருந்துகளைக் கொடுத்து வாய்வை தன்னிலைக்கு கொண்டுவர வேண்டும். அதி உஷ்ணத்தால் ஏற்பட்டு இருந்தால் உஷ்ண வீரியமுள்ள பொருள்களைக் கொண்டும் பரிகரிக்க வேண்டும்.

விதானத்தை இயற்கையாக சுருங்கி விரியக்கூடிய தன்மைக்குக் கொண்டுவர வேண்டும்.

தண்ணீர் அருந்துதல், மூச்சு உள்ளிருந்து சற்று வெளிவிடாமல் நிற்கவைத்தல், மூக்கில் மருந்து பொடிகளை நசியம் செய்து தும்மல் உண்டாக்கி திட்டுமுட்டு அடையச் செய்தல். வாய்வு அகற்றி மருந்து களைக் கொடுத்தும், மலக்குடல் சுத்தம் செய்தும், மேல் வயிறு நடுப் பாகத்தில் நெஞ்சுக் குழிக்குக் கீழே பற்று (எரிச்சல் உண்டாக்கக்கூடிய) போடுவதாலும், காது மடலை இழுத்துவிடுவதாலும், நாக்கை வேகமாக வெளியில் இழுத்துவிடுவதாலும், கழுத்தில் (உரோதர நரம்பு) விரல் களினால் அமுத்தியும் விக்கலை குணப்படுத்தலாம்.

மருந்து : அபின், அபின் சேர்ந்த மருந்துகளைக் கையாளலாம்


குளவிக் கூண்டுக் குடிநீர்	— சீதவீரியம்
நண்டு வளை நீர்	— சீதவீரியம்
மயிலிறகு பஸ்பம்	— உஷ்ண வீரியம்
மகா வசந்தகுசுமாகர மாத்திரை	— கலப்பு வீரியம்

நெஞ்சுக் குழியில் கடுகை அரைத்து தண்ணீரில் கலக்கி துணியை நனைத்து போட்டுக் கொள்ளல்.
பஞ்ச தீபாக்கினி சூரணம், லேகியம்.
சுக்கு, மிளகு தைலம் மூக்கில் இடுதல்.
மூக்கிலிடும் புகையிலை பொடி இட்டு தும்மல் உண்டாக்குதல்.

காரணம் கண்டு மேற்கூறிய மருத்துவத்தைச் செய்யவேண்டும்.

— நன்றி : பாளையங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரி ஆண்டு மலர் -1973

சந்தா நேயர்களும், வாசக அன்பர்களும்
கவனிக்க!



தீராது என்று கைவிடப்பட்ட நோய்களையும், ஆங்கில முறை ஊசி, மாத்திரைகளால் நோய் சிக்கலடைந்து தவிக்கும் நோயாளிகளையும் படுக்கை தந்து சிகிச்சை அளித்து குணமாக்க 15-படுக்கைகள் தான் உள்ளன. எனவே, இங்கு வந்து தங்கி சிகிச்சை செய்துக்கொள்ள விரும்பும் அன்பர்கள் படுக்கைகளுக்கு முன்கூட்டி கடிதம் எழுதுவது நலம்.

குறிப்பாக நீண்ட நாள் ஆஸ்துமா, காசம், மேகநோய் போன்ற கொடிய நோய்களை குணப்படுத்தக்கூடிய வகையில் மருத்துவம் செய்ய வசதிகள் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட நோய் உள்ள அன்பர்கள் மூலிகை மணி மருத்துவ மனைக்கு வந்து குணம் காணலாம்.

தீராத நாள்பட்ட நோயாளிகள் தக்க துணையுடனும், சமையல் செய்ய ஒரு சில பாத்திரங்களுடன் வருவது மிக்க நலம்.

மூலிகை மணி மருத்துவ மனை, போன் : 726
4, சாதுகார மடம் 2-வது தெரு, சலவன்பேட்டை, வேலூர்-1. (வ. ஆ.)

மருத்துவப் பழமொழிகள்!

மாதாவுக்குச் சுகமிருந்தால் கர்ப்பத்துக்கும் சுகம்.

மாதுளை தூதுளை வளர்ந்தவீடு வயிற்றிலே நெஞ்சிலே [களங்கமில்லை.

மாம்பூ பூப்பது மாதர்தம் சிரிப்பொலியால்

அசோகு பூப்பது ஆண்-பெண் ஊடலால்

மாதா ஊட்டாத அன்னம் மாங்காய் ஊட்டும்

மார்கழி உப்பு மண், தைமாத உப்பு தங்கம்.

முருங்கையும் எருமையும் வறுமையில் ஆஸ்தி.

மூடிவைத்த புண் ஆருது.

மேனிக்கு விளையாத சரக்கு ஞானிக்கு விளையுமோ ?

பாலுந் தழையும் சேராத தைலம்

பாகும் நெய்யும் சேராத லேகியம்

நாலும் இரண்டும் பாராத கல்வி நன்ருகா.

சங்கிலைத் தின்ருல் வெண்கலமாகும்.

சளி பிடித்ததோ ? சனி பிடித்ததோ ?

சாப்பிணி மருந்தேற்காது.

சாகிறவரையில் வைத்தியன் விடான், செத்தாலும் [விடான் பஞ்சாங்கக்காரன்.

சித்திபெருத மருந்தும் மருந்தோ ? பெற்றுப் படையாத [பிள்ளையும் பிள்ளையோ ?

சிறியார்க்கினியதைக் காட்டாதே ; [சேம்புக்குப் புளிவிட்டாக்காதே.

சிறுகுழந்தை இல்லாத வீடும் வீடன்று, [சீரகம் இட்டு ஆக்காத கறியும் கறியன்று.

[புலவர், அ. கலியபெருமாள்]

மணி மொழிகள்!

— திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள்

அன்பனே!

பழம் பாயேயானாலும் பஞ்சணையாகக் கருதிப் படு.

கசப்புப் பொருளாயினும் அதனைக் கற்கண்டாகக் கருதி உட்கொள். அதனால் மெய்ப்பதங் காண்பாய்.

உனது குற்றங்களை அல்லது குறைகளை ஒருவன் எடுத்துக் கூறினால் உன் மனம் வருந்துகின்றதன்றோ? ஆதலினால் நீ இன்னொருவன் குற்றங் குறைகளைக் கூறாதே. குணங்களைக் கூறு.

குற்றங்களுக்குத் தண்டனை தருபவர் கடவுளேயாவார்.

கடையைப் பூட்டியபின் உன் கடைப் பூட்டை மட்டும் இழுத்துப்பார். அடுத்தவர் கடைப் பூட்டுக்களை எல்லாம் இழுத்துப் பார்க்காதே! அது நகைப்புககு இடம்.

இப்போது நீ செய்கின்ற விவசாயத்தின் பயனை அடுத்த ஆண்டில் நீ அனுபவிப்பாய்; நன்கு உழைத்துப் பாடுபடுவாயானால் நல்ல பயன் விளையும். அடுத்த ஆண்டு உனக்கு மேலாக இருக்கும். சோம்பலாக இருந்து; பாடுபடாமல் பொழுது போக்குவாயானால் அடுத்த ஆண்டில் உனக்கு நன்மையிராது. அதுபோல் இந்தப் பிறப்பில் நீ செய்யும் நன்மைகளை மறுபிறப்பில் அனுபவிப்பாய். நன்மை செய்யாது சோம்பியிருந்து, தீங்கு புரிவாயானால் மறுபிறப்பில் உனது வாழ்வு சிறப்படையாது; தாழ்வு அடையும்.

இராக் காலத்திற்கு வேண்டியதைப் பகலில் தேடி வைத்துக்கொள்.

மழைக் காலத்திற்கு வேண்டியதை மற்றைக் காலத்தில் தேடி வைத்துக்கொள்.

முதுமைக்கு வேண்டியதை இளமையில் தேடிக்கொள்.

மறுமைக்கு வேண்டியதை இம்மையில் தேடிக்கொள்.

அநுபவம் உணர்த்தும் உண்மை

N. சுப்பையன்,

காளியம்மன்புதூர்,
கோவில்பாளையம் போஸ்ட்
பொள்ளாச்சி Tk. கோயம்புத்தூர் Dt

மதிப்பிற்குரிய ஐயா,

எனக்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக இருந்த மூக்கடைப்பு, தங்களின் 171-வது மூலிகை மணி இதழில் வெளிவந்த முறைபடி "வேலிப்பருத்தி, நொச்சி, கற்பூரவல்லி இவைகளின் சாற்றில் சுக்கை தட்டிப் போட்டு காயவைத்து பொடிசெய்து நசியமிட்டு வந்ததிலும், மேலும் முசுமுசுக்கைத் தைலம் தேய்த்து ஸ்னானம் செய்து வந்ததிலும் மூக்கடைப்பு 70 சதவீதம் குணம் கண்டேன்" இதற்காக நான் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நானும் தங்களின் "மூலிகை மணியை" வைத்துத் தான் பலருக்கு சிகிச்சை செய்துக்கொண்டு வருகிறேன் என்பதையும் நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

M. M. மதி,

C/o. காசிம் ஆயில் மில்,
105, ஆலங்குடியார் தெரு,
காரைக்குடி. P. O.

பெருமதிப்பிற்குரிய டாக்டர் அவர்களுக்கு,

M. M. மதி அதிக வணக்கத்துடன் எழுதிக்கொண்டது இப்பவும் தங்களது ஆசியுடன் நான் நலமாயிருக்கிறேன்.

தாங்கள் கொடுத்த மருந்துகளால் நான் பூரண குணமடைந்து இருக்கிறேன். தாங்கள் மருந்து கொடுத்த வேளையோடு என்னைப் பிடித்த புகைப்பழக்கமும் நீங்கியது கண்டு, என் குடும்பத்தார் நற் சந்தோஷமடைந்திருக்கிறார்கள். தங்கள் வெளியீடுகளை மிகவும் விரும்பி விடாமல் படித்து வருகிறேன். அவ்வப்பொழுது தங்கள் அறிவுரைப்படி சிற்சில மருந்துகளும் செய்து சாப்பிட்டுக்கொள்வது மாக இருந்து, ஆங்கில வைத்தியத்தை அறவே நாடாமல் சுகமுடன் இருந்து வருகிறேன்.

தாங்கள் ஆற்றிவரும் இத் தொண்டுகள் பற்றியம், தாங்கள் இன்னும் பல்லாண்டுகள் இருந்து தொண்டாற்றிவர எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வேண்டிக்கொள்கிறேன்.

எமது வெளியீடுகள் :

நம் நாட்டு மூலிகைகள்	1-ம் பாகம் ரூ.	4	00
நம் நாட்டு மூலிகைகள்	2-ம் பாகம்	4	00
நம் நாட்டு மூலிகைகள்	3-ம் பாகம்	4	00
நம் நாட்டு மூலிகைகள்	4-ம் பாகம்	4	00
நம் நாட்டு மூலிகைகள்	5-ம் பாகம்	4	00
நம் நாட்டு மூலிகைகள்	6-ம் பாகம்	4	00
நோயும் மருந்தும்	1-2 பாகம்	3	00
நோயும் மருந்தும்	3-4 பாகம்	3	00
விஷ ஜந்துக்களும் மூலிகைகளும்		4	00
சித்த மருத்துவத்தின் கருப்பொருள்		2	00
புகழ் பெற்ற மூலிகைகள்		0	60
மனித உறுப்புக்களில் மூலிகைகளின் குணாதிசயங்கள்		0	60
பயன் தரும் பத்துக் கீரைகள்		0	60
சக்தி தரும் சஞ்சீவி மூலிகைகள்		0	60
குழந்தைப் பிணிகளும் மூலிகை மருத்துவமும்		0	60

ஒரு புத்தகத்திற்கு
தபால் செலவு 25-காசு சேர்த்து அனுப்பவும்.

மொத்த புத்தகமும் தபாலில் பெற
புத்தக விலையுடன் ரூ. 3—00 சேர்த்து கீழ்க்கண்ட
முகவரிக்கு மணியாடர் அனுப்பி பெறலாம்.

முகவரி :-

ஆ. இரா. கண்ணப்பர்,

மூலிகை மணி அலுவலகம்

59. மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1. (வ. ஆ.)

Printed at Mooligai Mani (P) Press, Vellore. N. A.
Printer, Editor & Publisher Dr. A. R. Kannappar, R. M. P.
59, Masilamani Mudali Street, Vellore-632001.